**C.O.S.No.01/2025** **தேதி – 12.03.2026**

**வா.சா.1. – பெருமாள்சாமி**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை –**

நான் சுவாமி புட்கண்டய்னர் என்ற நிறுவனத்தை நடத்தி வருகிறேன். எத்தனை ஆண்டுகள் நடத்தி வருகிறேன் என்றால் 2016 முதல் நான் மேற்படி நிறுவனத்தை நடத்தி வருகிறேன். எனது நிறுவனம் மூலம் என்ன உற்பத்தி செய்கிறேன் என்றால் அலுமினிய புட்கண்டெய்னர் உற்பத்தி செய்து வருகிறேன். நான் தாக்கல் செய்த பிராதில் நான் தேங்காய் வியாபாரம் செய்வதாக கூறியுள்ளேன். அதை நான் 2024 முதல் செய்து வருகிறேன். இவ்வழக்கில் நான் தேங்காய் வியாபாரம் செய்வதற்கான ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்யவில்லை. அதற்கு ஆவணம் எதுவும் தேவையில்லை. நான் சாத்தூரை சேர்ந்த அன்புக்கரசன் என்பவர் மூலமாக தேங்காய் வியாபாரம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். மேற்படி அன்புக்கரசன் என்பவர் ஆர்.பி லாரி சர்வீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் என்றால் சரிதான். மேற்படி அன்புக்கரசன் மூலமாகத்தான் பிரதிவாதியை எனக்கு தெரியும் என்றால் சரிதான். இவ்வழக்கின் பிரதிவாதியை நான் நேரில் சந்தித்தித்தேனா என்றால் ஒரே ஒரு முறை சந்தித்தேன். நான் பிரதிவாதியை ஒரே ஒரு முறை தவிர்த்து நான் பிரதிவாதியுடன் மேற்கொண்ட வியாபார பரிவர்த்தனைகளை மேற்படி அன்புக்கரசன்தான் பார்த்துக் கொண்டார் என்றால் சரியல்ல. மேற்படி அன்புக்கரசன் வியாபாரத்திற்கு போக்குவரத்து பரிமாற்றம் செய்தார். பிரதிவாதியிடம் போன் மூலம் மட்டுமே தொடர்பு கொண்டார். நான் பிரதிவாதியிடம் தேங்காய் வியாபாரம் எந்த காலக்கட்டத்தில் செய்தேன் என்றால் 2024 ஜீன் முதல் 2024 ஜீலை வரை ஆகும். இவ்வழக்கின் பிரதிவாதி என்னிடம் எவ்வளவு தொகைக்கு தேங்காய் கொள்முதல் செய்தார் என்றால் ரூபாய் 86,29,935/– செய்தார். பிரதிவாதி மேற்படி தொகையில் ரூபாய் 14,83,190/– மட்டுமே செலுத்தியுள்ளார். மீதி தொகையை பொறுத்து பிரதிவாதியிடம் கேட்டேனா என்றால் கேட்டேன். அதுபோல் ஆர்.பி லாரி டிரான்ஸ்போர்ட் உரிமையாளரிடமும் கேட்டேன். அதற்கு அன்புக்கரசன் என்ன சொன்னார் என்றால் நான் லாரியில் சரக்கை அனுப்பிவிட்டேன். நீங்கள் அவரிடம் கேட்டுக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார். பிரதிவாதி வடமாநிலத்தை

சேர்ந்தவர் என்றும், அன்புக்கரசன் தான் நடவடிக்கைகளை பார்த்து வந்தார் என்றும், ஆகவே அன்புக்கரசன்தான் தொகையை செலுத்த வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு செய்தேனா என்றால் செய்தேன். அன்புக்கரசனுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு செய்தீர்களா என்றால் தேவையில்லை என்பதால் அனுப்பவில்லை. இவ்வழக்கின் பிரதிவாதி அவர் செலுத்த வேண்டிய மீதித் தொகைக்கு 4 தேதிகளில் மொத்தம் ரூபாய் 25,75,000/– பணத்தை மேற்படி அன்புக்கரசன் மூலமாக எனக்கு செலுத்துவதாக தகவல் தெரிவித்திருந்தாரா என்றால் தெரிவிக்கவில்லை. உண்மையிலேயே ரூபாய் 25,75,000/–த்தை அன்புக்கரசன் மூலம் எனக்கு செலுத்திவிட்டார் என்றும், தற்போது நான் அதை வழக்கிற்காக மறைக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்த வா.சா.ஆ.11 ஆவணம் எங்கள் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் ஆவணம் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பிராதில் கூறியுள்ளது போல் பிரதிவாதிக்கு தேங்காய்களுக்கான இன்வாய்ஸ்சை எப்படி அனுப்பினேன் என்றால் தேங்காய் லாரியுடனும் அனுப்பினேன், Whats–app மூலமாகவும் அனுப்பினேன். Whats–app மூலமாக அனுப்பியதற்கு ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்த இன்வாய்ஸ்சும், லெட்சர் புக் ஆகியவை வழக்கிற்காக உருவாக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அன்புக்கரசன் என்பவர் இவ்வழக்கின் முக்கிய தரப்பினர் என்றும், அவரை வழக்கில் சேர்க்காததால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் இந்த வழக்கில் கேட்டுள்ள தொகையை பொறுத்து அன்புக்கரசனிடம்தான் நான் கோர முடியும் என்றும், பிரதிவாதியிடம் கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> – இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்காள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.